விளம்பி, ஐப்பசி 16 (2-11-2018) கலியுகம் - 5120, விலை ₹ 100.00
2nd November 2018 - Volume 41 - Issue - 24, ₹ 100.00

# விஜய பாரதம்

தேசிய வார இதழ்

இரண்டு புத்தகங்கள்

புத்தகம் - 1



இந்திய நதிகள்

தீபாவளி இதழ் - 2018

# பாரத வர்ஷம் என்றால்...

## D.K. ஹரியுடன் சந்திப்பு

- ஆனந்த் வெங்கட்

**கே: இந்திய நாட்டை பாரத தேசம் என்பது மரபு. பாரத வர்ஷம் என்றும் சொல்கிறார்களே?**

நமது பாரத தேசத்தை பாரத வர்ஷம் என்று அழைப்பதற்கு பல காரணங்கள். அமேசான் காடுகளுக்கு சமமாக தவறாமல் மழை பெறும் தேசமாக இருந்தோம். தவறாமல் சுபிக்ஷ மழை பொழிந்ததால் இந்தத் தேசத்தை பாரத வர்ஷம் என்ற அழைக்கலாயினர்.

**கே: நமக்கான மழைவரவு எப்படி?**

பூமத்திய ரேகைக்கு வடக்கே இருக்கிறோம் நாம். மிகச் சரியாக, ஜூன் மாதம் 4ம் தேதி கன்யாகுமரியில், 6ம் தேதி கோவாவில், மராட்டியத்தில் ஜூன் 17 தேதிகளில் என்று இந்த தேதிகளை ஒட்டி மழை பெய்கிறது. தென்துருவத்தில் இருக்கும் ஆஸ்திரேலியாவின் பாலைவனப் பகுதிகளில் மே மாதத்தில் கடும் குளிர் நிலவுகிறது. இதனால் காற்று மண்டலத்தில் உயர் அழுத்தம் உருவாகிறது. இந்த உயர் அழுத்தம் இயற்கையாக



ஆராய்ச்சியாளர், D.K. ஹரி மற்றும் அவரது மனைவி ஹேமா ஹரி ஆகியோருடைய பேட்டி இது. இவர்கள் ஐநூறுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள், முப்பதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சி குறிப்புகள் அடங்கிய தகவல் பொக்கிஷ புத்தகங்கள், இருநூறுக்கும் மேலான காணொளிகள் போன்றவற்றை தொகுத்து வெளியிட்டுள்ளனர். அத்தனையும் பாரத வர்ஷம் பற்றித்தான்.





குறைந்த அழுத்தம் இருக்கும் இடத்தை நோக்கிப் பயணிக்கும். சஹாரா பாலைவனங்களில் சுட்டெரிக்கும் வெய்யிலும், குறைந்த காற்றழுத்தமும் நிலவும் நேரமது.

ஆஸ்திரேலியாவிலிருந்து பயணிக்கும் இந்த உயரழுத்தம், அந்த நேரத்தில் மிகக் குறைந்த காற்றழுத்தம் இருக்கும் சஹாராவை நோக்கிப் பயணிக்கிறது. போகும் வழியில் இந்திய மகா சமுத்திரத்தைக் கடக்க நேரிடுகிறது. அப்போது காய்ந்த உயர் அழுத்தம், கடலில் உள்ள ஈரப்பதத்தை ஆவியாக்கி உறிஞ்சிக்கொண்டு மேகங்களாகிறது.

போகும் வழியெங்கும் இவ்வாறு மழைமேகங் களை உருவாக்கி சரியான குறைந்த அழுத்த இடத்தில் கொட்ட இடம் தேடி பயணிக் கிறது. கிரிக்கெட் விளையாட்டில் பந்தின் ஒரு பக்கம் பளபளப்பாகவும் மறுபக்கம் சொரசொரவென்றும் இருப்பதால், பந்து வீச்சாளர் பந்தை சுழற்றி விசையுடன் வீசும்போது பூமியில் பட்டு திசை மாறுவது போல பூமத்திய ரேகையைக் கடக்கும்போது காற்றின் திசை மாறி சுழன்று மேகங்கள் கிழக்கு நோக்கி நகர்கின்றன.

குஜராத் முதல் கேரள கடைக்கோடி வரை பரந்து விரிந்து கிடக்கும் பாரதத்தின் வரப்பிரசாதமான மேற்குத் தொடர்ச்சி மலையான ஸஹ்யத்திரி மலை இருக்கிறது. அத்ரி என்றால் மலை. ஸஹாய, ஸஹ்ய என்றால் உதவுபவர் என்று பொருள். இந்த மலை இவ்வாறு வரும் ஈரப்பதம் மிகுந்த காற்றைத் தடுக்க காற்றும், ஈரப்பதமுமாக மேலெழுந்து மழை பொழிகிறது. இந்தக் காற்றின் போக்கையும், மழை எங்கு உருவாகிறது என்பதையும் அறிந்து இந்த மழையே பாரதத்தின் உயிர் நாடி என்பதை உணர்ந்து இந்த மலைக்கு இப்படி ஒரு பெயர் வைத்தார்கள் பெரியோர்கள்.

மலைக்கு அருகே முதலில் இருக்கும் பகுதி களில் மழை பெய்தவுடன் ஆகாயத்தில் இருக்கும் அழுத்த முறை மாறுகிறது. படிக்கட்டுகள் போல முதலில் பெய்த இடத்தை விடுத்து, அடுத்தடுத்த பகுதிகளை நோக்கி நகர்கிறது.

ஒரு வருடத்தின் 8760 மணி நேரத்தில் வெறும் 100 மணி நேரம்தான் மழை பொழிகிறது. இந்த 100 மணி நேர நீரை சேமித்து, மிச்சம் இருக்கும் 8660 மணி நேரத்திற்கான செலவுக்காக சேமிக்கவேண்டும். இந்த சஹ்யத்ரி மலை வெறுமனே தென்பகுதியோடு நிறுத்துவதில்லை. மேகாலயா, அசாம், பஞ்சாப், சியால்கோட் என்று அனைத்து பகுதிகளுக்கும் மழை பொழிய உதவுகிறது. அனைத்து மேகங்களும் கடைசியாக ஒரு குறிப்பிட்ட சரணாலயமாக கொள்வதால்தான் வடகிழக்கு பகுதியின் உச்சியில் இருக்கும் பகுதியை மேகாலயா என்று அழைக்கிறோம்.

போல பணம், பணமென்று பணத்தின் பின்னால் போகாமல் முன்னேற்றத்தின் பின்னால், வளர்ச்சியின் பின்னால், வருங்கால தலைமுறைக்கு எதை சேமிக்கவேண்டுமோ அதை சேமிக்கும் நோக்கத்தோடு இந்த உலகத்தில் பாதுகாப்பாக வாழ எது தேவையோ அந்த இயற்கையை சிறப்பாக உபயோகப்படுத்தி, அடுத்த தலைமுறைக்கு சவுகரியங்களை ஏற்படுத்தி, இயற்கை வளங்களை மேலும் சீர்படுத்தி விட்டு செல்லும் நோக்குடன் உழைத்திருப்பதன்றோ சரியான முன்னேற்றம்?

இப்படி சேமிக்கப்பட்ட இந்த நீரை மத்திய அரசின் இன்றைய மின்சார இணைப்புத் திட்டமான 'உதய்' திட்டம் போல ஒரு சங்கிலித் தொடர் முறையை ஏற்படுத்தி எல்லா பகுதிகளையும் வளம் பெறச் செய்ய முடியும். பூமிக்கு மேல் பரப்பிலே தூர்ந்த கால்வாய்களை மீண்டும் உயிர்ப்பித்து ஏரிகளை இணைத்து மற்ற இடங்களுக்குப் போகச் செய்யலாம் அல்லது நெடுஞ்சாலைகளை ஒட்டி கால்வாய்களை வெட்டி, இயற்கையாக ஆறோ, ஏரியோ நிரம்பியவுடன் மற்ற இடங்களுக்குப் பாயச் செய்யலாம்.

இப்படி திறந்தவெளிகளில் அதிக அளவில் சேமித்தால் காற்றின் ஈரப்பதம் அதிகரித்து புவி குளிர்ச்சியடையும். காற்றின் மூலம் பெறவேண்டிய ஈரப்பதம் மரங்களுக்கும், மனிதர்களுக்கும், விளைநிலங்களுக்கும் பரவி வேளாண்மையும் தனிமனித ஆரோக்கியமும் பெருகும். எந்தெந்த இடங்களில் நீர் இல்லையோ, மழை இல்லையோ அங்கு அனுப்பி விவசாயத்தை மேம்பாடு அடையச் செய்யலாம். தேசத்தின் எந்த பகுதியும் இனி கடைமடை என்று அழைக்கவே முடியாதபடி நீர்மேலாண்மையை உருவாக்க முடியும்.

நீருக்கு வடிகால் அமைத்து பரவவிட்டு சேமிப்பதால் விலைமதிப்பில்லா உயிரிழப்பையும், பொருட்சேதத்தையும் தடுத்து, இயற்கை அழிவையும், தடுக்கலாம். இது ஒரு சவால்தான். ஆனால், நேர்மறையான சவால். நடக்கக் கூடிய காரியமா என்று சிந்திக்கவேண்டியதில்லை. காரணம், இது ஏற்கனவே நடந்து வந்த காரியம். கடந்து வந்த பாதையை மீண்டும் சிந்தித்து அதற்கு உயிரூட்டினால் போதும்.


**AVANT-GARDE ENGINEERS AND CONSULTANTS (P) LTD**

ISO 9001:2015 ISO 17020:2012

*We provide Services for*

- Independent Power Plants
- Captive Power Plants
- Biomass based Power Plants
- Combined Cycle Power Plants
- Co-Generation Plants
- Waste Heat Recovery Systems
- Mini Hydro Power Plants
- Solar Thermal & Solar PV Power Plants
- Sugar Plants
- Distillery Plants with Vinasse / SLOP fired Co-Generation Plants
- Chemical and Petrochemical Plants
- Water and Waste Water Treatment Plants
- Industrial Effluent Treatment Plants
- Process Piping
- Steam Generator Design and Engineering
- Equipment Design
- Heat Transfer Products and Systems
- Energy Audits
- Third Party Inspection Services - PVoC & CoC
- Boiler Capacity Upgradation & Remnant Life Assessment Studies (RLA)

QR Code

PROVIDER OF ECO-FRIENDLY ENGINEERING SOLUTIONS

Avant-Garde Engineers and Consultants (P) Ltd., 68A, Porur Kundrathur High Road, Porur, Chennai – 600 116, India
Tel: +91-44-4598 1200, 2482 8717 - 23
Fax: +91-44-2482 8531
avantgarde@vsnl.com
www.avantgarde-india.com | www.avant-garde.in

Avant-Garde Systems and Controls (P) Ltd., 67A, Porur Kundrathur High Road, Porur, Chennai – 600 116, India
Tel: +91-44-2482 7843, 24828532
Fax: +91-44-2482 8531
agsc@vsnl.com
www.agsc.in

Avant-Garde Engineers & Consultants (FZC) Executive Suite, P.O. Box:122632, Sharjah U.A.E
Tel: +971566924002
info@avantgarde-uae.com
www.avantgarde-uae.com